## சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – சத்துணவுப் பணியாளர்கள் காலிப் பணியிடங்களை நிரப்புதல் – காலிப் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வுக்களை நடத்துவதற்கு தேர்வுக் குழுக்களை ஏற்படுத்துதல் – ஆணையிடப்படுகிறது.

---

### சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந4–2) துறை

அரசாணை (நிலை) எண். 28

நாள். 05.09.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி ஆவணி 20

படிக்கப்பட்டவை :-

அரசாணை (நிலை) எண்.163, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி.2) துறை, நாள் 18.08.2010.

-----

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்கு விண்ணப்பம் செய்பவர்களுக்கான கல்வித் தகுதி, வயது வரம்பு மற்றும் பிற தகுதிகளை நிர்ணயம் செய்தும், சத்துணவுப் பணியாளர் காலிப்பணியிடங்கள் குறித்து விளம்பரம் செய்தல், விண்ணப்பங்களை பெற்று ஆய்வு செய்து நேர்முகத் தேர்வு நடத்தி பணிநியமனம் வழங்குதல் ஆகியவற்றுக்கான வழிமுறைகள் குறித்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் சத்துணவு மையங்களில் ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு சத்துணவு அமைப்பாளர், ஒரு சமையலர் மற்றும் ஒரு சமையல் உதவியாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. சத்துணவு அமைப்பாளர்கள் 60 வயதிலும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்கள் 58 வயதிலும் பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெறுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் சத்துணவு காலிப் பணியிடங்களுக்கு விண்ணப்பம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டு வருகிறது.

3. மேலே படிக்கப்பட்ட அரசாணையில் சத்துணவுப் பணியாளர்களை தேர்வு செய்வதற்கான தேர்வுக் குழுக்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தை செவ்வனே செயல்படுத்த அவ்வப்பொழுது ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்பிடுவது அவசியமானது ஆகும். ஆயினும் கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவல் உள்ள சூழ்நிலையில் சமூக இடைவெளி கடைப்பிடித்தல் மற்றும் முககவசம் அணிதல் போன்ற பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி குறைவான எண்ணிக்கையில் விண்ணப்பதாரர்களை அழைத்து நேர்முகத் தேர்வுகளை நடத்த வேண்டியதும் கட்டாயமாகிறது.

4. மேற்காணும் சூழ்நிலையில், மேலே படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தகுதிகள்/ நிபந்தனைகள்/அறிவுரைகளின் அடிப்படையில் புரட்சித் தலைவர்

த.பி.பா.,

எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வுகளை நடத்தி, தகுதி வாய்ந்த நபர்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பரிந்துரை செய்யும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) கீழ்க்காணும் அலுவலர்களைக் கொண்ட தேர்வுக் குழுக்களை ஏற்படுத்தி அரசு ஆணையிடுகிறது :-

| தேர்வுக் குழு–1 | தேர்வுக் குழு–2 | தேர்வுக் குழு–3 |
|---|---|---|
| **தலைவர்**<br>மாவட்ட வருவாய் அலுவலர் | **தலைவர்**<br>மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) | **தலைவர்**<br>மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சஉதி) |
| **உறுப்பினர்**<br>1. வட்டாட்சியர் (சம்மந்தப்பட்ட வட்டம்)<br>2.வட்டார வளர்ச்சி அலுவலர் (சம்மந்தப்பட்ட வட்டாரம்) | **உறுப்பினர்**<br>1. வட்டாட்சியர் (சம்மந்தப்பட்ட வட்டம்)<br>2. வட்டார வளர்ச்சி அலுவலர் (சம்மந்தப்பட்ட வட்டாரம்) | **உறுப்பினர்**<br>1.வட்டாட்சியர் (சம்மந்தப்பட்ட வட்டம்)<br>2. வட்டார வளர்ச்சி அலுவலர் (சம்மந்தப்பட்ட வட்டாரம்) |

5. சமூக நல ஆணையர் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இவ்வாணையின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ. மதுமதி,
அரசு செயலாளர்.

பெறுநர்,
சமூக நல ஆணையர், சென்னை–15.
இயக்குநர் (ம) குழும இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறை,
தரமணி, சென்னை–113.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5
இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை–15.

நகல்.
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களின்
தனிச் செயலாளர், சென்னை–9.
செயலாளர் , சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
வருவாய்த் துறை, சென்னை–9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
இ.கோ/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

5/9/2020